DEPOSITION OF WITNESS
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )
**O.S.No. 255/2013**

| | |
|---|---|
| Deposition of Witness for | : DW 2 |
| Name | : சிவனையா |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 15.07.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 15th July 2026

**முதல்விசாரணை :**

நான் இவ்வழக்கில் 2ம் பிரதிவாதி ஆவேன். நான் இன்று இந்த வழக்கில் எனக்காகவும், 3ம் பிரதிவாதிக்காகவும் சேர்த்து எனது சத்தியபிரமாண நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். மேற்படி வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் நான் கையொப்பம் செய்திருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை எனது முதல் தரப்பு விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன்.

1. 16.12.2013 தேதியிட்ட 2,3 பிரதிவாதிகளிடம் இருந்து 3ம் பிரதிவாதி தனக்காகவும், தனது மைனர் மக்களுக்காகவும் பெற்ற கிரைய ஆவணம் சார்பதிவாளர் நகல் தாக்கல் செய்கிறேன். **அது பி.வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2.** 28.07.2014 தேதியிட்ட சங்கரன்கோவில் தலைமையிடத்தில் துணைவட்டாட்சியர் வழங்கிய 10(1) அடங்கல் தாக்கல் செய்கிறேன். **அது பி.வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**3.** 18.12.2012 தேதியிட்ட 2ம் பிரதிவாதி பெயருக்கு கள்ளவண்டகோனார் தபசில் சொத்திற்கு செலுத்திய தீர்வை ரசீது தாக்கல் செய்கிறேன். **அது பி.வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. 27.03.2017 தேதியிட்ட 2ம் பிரதிவாதி வகையறாக்கள் M/s.INDUS TOWERS LIMITED கம்பெனியுடன் பிறப்புவித்துக்கொடுத்த Renewal lease deed அசல் தாக்கல் செய்கிறேன். **அது பி.வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**5.** 27.01.2021 தேதியிட்ட 2ம் பிரதிவாதி, 3ம் பிரதிவாதி வகையறாக்கள் பிறப்புவித்துக்கொண்ட பாகப்பிரிவினை ஆவணம் சார்பதிவாளர் நகல் தாக்கல் செய்கிறேன். **அது பி.வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

நான் தாக்கல் செய்துள்ள மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு அசல் வழக்கினை தள்ளுபடி செய்திடப் பிரார்த்திக்கிறேன்.

**வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**